1981 மார்ச் 5]

திரு. ஜே. எஸ். இராசு : தலைவரவர்களே, குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொண்டதன் காரணமாகத்தான் இறந்துவிட்டனர் என்று கிளியர் கட் ஆகத் தெரிந்த குடும்பத்தினருக்கு கூட மூன்றாண்டுகளாகத் தரப்படாமல் இருக்கின்ற நிலைமையை அறிந்து ஒரு ஸ்டிப்புலேடட் டைம் ஃபிக்ஸ் பண்ணி அந்த வகையிலே விரைவாகக் கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அதுபற்றித்தான் நான் ஏற்கெனவே சொன்னேனே. அறுவை சிகிச்சை காரணமாக இல்லாமல் வேறு காரணமாக இறந்திருந்தாலும் கூட அந்த அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஒரு மாத காலத்திற்குள்ளாகவே இறந்து விடுகின்ற அத்தனை பேர்களுக்கும் உடனடியாகக் கொடுக்கவேண்டும் என்று ஆணையிட்டு அதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதிலே எந்தவிதமான டிஃபிகல்டீஸும் கிடையாது. உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

அரசு பஸ்களில் தானாக இயங்கும் கதவுகள்.

*வினா எண். 390—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரசு பஸ்களில் தானாக இயங்கும் கதவுகள் பொருத்தும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த 5 பேருந்துகளில் மட்டும் தானாக இயங்கும் கதவுகள் பொருத்தப்பட்டு உள்ளன. மற்ற போக்குவரத்துக் கழகங்களில் அதை உடனே பொருத்தும் நிலை தற்போது இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, 1981—82 ஆம் ஆண்டுகளில் ஜப்பானில் டிரைவர் இல்லாமலே பஸ் விடப்படுகின்றது. அதே மாதிரி நமது தமிழ்நாடு அரசாங்கமும் பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்யுமா? அடுத்து விபத்துக்கள் ஏற்பட்டுவிட்டால் அது பற்றித் தகவல் கொடுப்பதற்குக் கால தாமதம் ஏற்படுகின்றது. ஆகவே உடனடியாகத் தகவல் கொடுக்கின்ற வகையில் பேருந்துகளில் வயர்லெஸ் கருவி பொருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

[1981 மார்ச் 5

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்புடையதல்ல என்றாலும் மிகவும் பயனுள்ள கேள்வியாக கேட்டிருப்பதால் பதில் சொல்கிறேன். விபத்துக்கள் ஏற்படுகின்ற போது உடனடியாகத் தகவல் கொடுக்க முடியவில்லை என்பதை உணர்ந்து நமது முதல்வர் அவர்களும், இந்த அரசும் அது போன்ற வயர்லெஸ் கருவிகளைப் பொருத்துவது குறித்து ஆலோசனை செய்து அவ்வாறு பேருந்துகளில் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறோம். அடுத்து டிரைவர் இல்லாத பேருந்துகள் விடப்படுமா என்று கேட்டார்கள். அதைப் பற்றியும் கூட நாம் ஆராய்ச்சி செய்து கொண்டு இருக்கிறோம்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, பேருந்துகளில் விபத்துக்கள் நடக்கின்றபோது அவை கதவுகள் இருக்கின்ற பக்கம் சாய்ந்து விடுகின்ற காரணத்தால் அதன் வழியாக மக்கள் வெளியே வந்து விபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முடிவது இல்லை. எனவே பின்புறத்தில் எமர்ஜென்சி காலத்தில் பயணிகள் வெளியேறக் கூடிய வகையில் கதவுகளை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இது வரை அப்படிப்பட்ட ஒரு ஆராய்ச்சியை அரசு எடுக்கவில்லை. ஏனென்றால் அப்படிப்பட்ட கதவுகள் சாதாரணமான இடத்தில் ஓடிக் கொண்டிருக்கின்ற பேருந்துகளுக்குத் தேவையில்லை என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. மலைப் பாங்கான இடங்களில் ஓடுகின்ற பேருந்துகளுக்கு மட்டும் அத்தகைய கதவுகள் தேவை என்று கருதப்படுகின்றது. மற்ற இடங்களில் ஓடுகின்ற பேருந்துகளுக்கும் அப்படிப்பட்ட கதவுகள் தேவை என்று கருதினால் அதை நடைமுறைப்படுத்த அரசு முன்வரும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, சென்னை பொருட்காட்சியில் 100, 150 பேர் உட்காருகிற வகையில் ஒரு பேருந்தை போக்குவரத்துக் கழகம் அமைத்திருப்பதாக அறிவித்து இருக்கிறார்கள். அந்தப் பேருந்தில் கண்டக்டர் இல்லாமல் இயந்திரமே காசு வாங்குகின்ற அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, முதலிலே அந்த பேருந்துகளை நாம் நடைமுறைக்குக் கொண்டுவந்து விட்ட பிறகு அதைக் கண்டக்டர் இல்லாமல் ஓட்டுவதா, டிரைவர் இல்லாமல் ஓட்டுவதா என்பதைப் பற்றி முடிவு எடுக்கலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS